விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM  Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02  திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 25  ( 08 - 05 - 1991 )  புதன்கிழமை  ஓசை: 79

## யாழ். வைத்தியசாலையில் சுகாதார சீர்கேடு

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலை கடந்த ஒருவருட காலமாக சுகாதார பரிசோதகர் இல்லாத நிலையில் இயங்கி வருகிறது. இதனால் நுளம்புத் தொல்லை, குப்பை கூழங்கள் வைத்தியசாலையின் சுற்றாடலில் பன்றிகள், நாற்றமடிக்கும் வடிகால்கள், கட்டாக்காலிநாய்கள் என அனைத்தும் பெருகிவிட்ட நிலையில் உள்ளன. ஒரு வருடத்திற்கு முன்னர்வைத்தியசாலையின் பொது (4 ஆம்பக்கம் பார்க்க)

# மனித உரிமை மீறல் தொடர்பான சிறிலங்காவின் விவகாரத்தில் அக்கறை கொண்டுள்ளோம்

## பிரிட்டன் பிரதமர் ஜோன் மேயர் கடிதம்

(லண்டன்)

சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்து நாம் மிகவும் அக்கறை கொணடுள்ளோம். மனித உரிமைகள் தொடர்பான எமது நிலைப்பாட்டினை சிறிலங்கா அரசுக்கு நாம் தொடர்ந்தும் விளக்கிவருகிறோம் என்று பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயர் கமன்ஸ் சபை உறுப்பினர் டவட் விகலிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர் நடவடிக்கைக் குழுத் தலைவர் எஸ் மகரசிங்கம் எழுதிய கடிதத்தை இணைத்து டவட் விகலியும் ஒரு கடிதத்தைப் பிரதமர் ஜோன் மேயருக்கு அனுப்பியிருந்தார். இக் கடிதத்திற்குப் பிரதமர் எழுதிய பதிலிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

சிறிலங்காவுக்கு ஆயுத உதவி வழங்குவது தொடர்பாகத் தீர்மானமெடுத்து அதைச் செயற்படுத்துவதில் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்கிறோம். வர்த்தக அடிப்படையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் ஆயுதங்களை வழங்குகிறோம். சிறிலங்கா உட்பட பல நட்பு நாடுகளின் இராணுவ அதிகாரிகளுக்கு நாம் பயிற்சி வழங்கி (4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம் லெப். உத்தமன்

(யாழ்ப்பாணம்)

திருமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை ஆறு மணியளவில் ஏற்பட்ட வெடி விபத்துச் சம்பவமொன்றில் லெப். உத்தமன் (வேலாயுதம் குவேந்திரன், 12 ஆம்கட்டை, இறக்கக்கண்டி, திருமலை) என்ற போராளி மரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## போராட்டத்திற்கான ஆசிரியர்களின் பங்களிப்பு உற்சாகம் அளிக்கின்றது

-தினேஷ்

"தமிழீழவிடுதலைப்போராட்டத்தில ஆசிரியர்களும், மாணவர்களும் எம்முடன் தோளோடு தோள்நின்று பல்வேறு வழிகளிலும பங்காற்றி வருவது எமது போராட்டத்தைப் பலப்படுத்துவதுடன் (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா கிராமங்கள் மீது அகோர குண்டு வீச்சு; ஷெல்தாக்கு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாலமோட்டை, கிழவிகுளம், சோழியாகுளம் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் முழுவதும் மூர்க்கத்தனமான விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதுடன். மாமடு இராணுவ முகாமில் இருந்து இப்பகுதிகளை நோக்கி அட்லறி ஷெல் தாக்குதலும் மேறகொள்ளப்பட்டது

நேற்று முன்தினம் அதிகாலை 5.30 மணிதொடக்கம் மாலை 6 மணிவரை சிறிலங்கா விமானப் படையைச் சேர்ந்த அவ்ரோ விமானம் ஒன்றும் வை-12 ரக விமானம் ஒன்றும் இப்பகுதிகளில் ஐம்பதுக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன அத்துடன் (4 ஆம் பக்கம் பார்க்க)

## வேப்பங்குளத்தில் மேலும் ஆயுதங்கள் பல மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் வேப்பங்குளம் பகுதியில் கடந்த மார்ச்மாதம் முப்பத்தோராம் திகதியன்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் நடைபெற்ற இடத்தில் இருந்து மேலும் பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. அதேவேளை சிறிலங்கா இராணுவத்தின் சிதைந்த உடலொன்றும் அப்பகுதியல் காணப்பட்டது.

நேற்றுமுன்தினம இப்பகுதியில் விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தேடுதலின்போதே இவை கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவைச் சூழ ஒருமணி நேர குண்டு வீச்சு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் நேற்று முன்தினம் காலை 10·30 மணிதொடக்கம் 11·30 வரை விமானத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறிலங்கா விமானப்படையைச் சேர்ந்த மூன்று குண்டு வீச்சு விமானங்கள், மூன்று ஹெலிகொப்ரர்கள், ஒரு அவ்ரோ விமானம் இணைந்து இத்தாக்குதல்களை மேற்கொணடுள்ளன. ஹெலியில் இருந்து ஐம்பது கலிபர் தாக்குதலும் மேறகொள்ளப்பட்டது.

## பாம்பு தீண்டிய மூவரில் ஒரு பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

வசந்தபுரம் பகுதியில் நள்ளிரவு வேளை மூவரைப் பாம்பு தீண்டியது இதில ஒருவர் மரணமானார் மற்றொருவரது நிலை கவலைக்கிடமாக வுள்ளது.

கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள வசந்தபுரம் என்னும் இடத்திலேயே கடந்த வாரம் மேற்படி சம்பவம் இடம் பெற்றது.

இதில் செபதேகி றோஸ் (4 ஆம் பக்கம் பார்க்க)

## ஒய்வூதியம் வழங்குவதில் வடக்கு - கிழக்குபுறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

சுயவிருப்பின்பேரில் இளைப்பாறிய ஆசிரியர்களுக்கான ஒய்வூதியத்தை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கோரி ஒய்வூதியப்பணிப்பாளருக்கு யாழ். பிராந்தியக் கல்விப் பணிப்பாளர் அவசர செய்தி ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்

ஏனைய பகுதிகளில் மேற் (4 ஆம் பக்கம் பார்க்க)

## உலர் உணவு பற்றாக்குறை விநியோகம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தீவகததில இருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகததை யாழ். செயலக புனர்வாழ்வுப்பிரிவு பிற்போட்டுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினரிடம் இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்வதற்குத் தேவையான உணவுப்பொருள்கள் போதுமான அளவில் கையிருப்பில் இல்லை, இதனால் இடம் பெயர்ந்த மக்களுக்கான உலர் உணவு விநியோகத்தை அடுத்த வாரம்வரை பிற்போட்டுள்ளது

திடீரென தீவகத்தில் இருந்து மக்கள் இடம்பெயர்ந்த சமயம் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் செயலக புனர்வாழ்வுப் பிரிவுக்கும் இடையில் உணவு விநியோகம் தொடர்பாக ஏற்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் செயலகம் மூன்று தினங்கள் மட்டுமே பூரணமான உணவு விநியோகத்தை மேற்கொண்டது. ஏனைய தினங்களிலும் தற்பொழுதும் தொடர்ச்சியாக அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏனைய சமூகசேவை. மற்றும் தொண்டர் ஸ்தாபனங்கள் சிலவுமே உணவு விநியோ (4 ஆம் பக்கம் பார்க்க)

## வைத்தியத்திற்காக கொழும்பு செல்லவுள்ளோர் தொடர்பு கொள்ளவும்

கப்பல் மூலம் கொழும்பு செல்லவுள்ள நோயாளர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ் போதனா வைத்தியசாலைப பணிப்பாளர் கேட்டுள்ளார்.

அடுத்த வாரமளவில் சிகிச்சைபெறுவதற்காக கப்பல் மூலம் கொழும்பு செல்லவுள்ள நோயாளர்களையே இவ்வாறு பதிவு செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

நாளை வியாழன் 2மணிக்கும், வெள்ளி 10மணிக்குமிடையில் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தகுந்த ஆவணங்களுடன் தாமே நேரடியாகவந்து தமது பிரயாணத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

திருநாவுக்கரசு மோகனதாஸ் ஆகிய எனது 683470368 V இலக்கமுடைய அடையாள அட்டை சாவகச்சேரி தபால் நிலையத்திற்கு முன்பாக தவறிவிட்டது. இதைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஒப்படைக்கவும். விக்னேஸ்வரன் ஜுவலர்ஸ், கண்டி வீதி, சாவகச்சேரி. தகுந்த சன்மானம் வழங்கப்படும். R/1379

### ஊழியர்களுக்கு அழைப்பு

வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய இரு பிரதேச சபைகளைச் சேர்ந்த அனைத்து ஊழியர்களையும் இன்று புதன் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் சந்திக்குமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (24)


# காப்புறுதிக் கூட்டுத்தாபனம்

# முழுமையாக செயற்படாமையால் கடன் வழங்குவதில் சிரமம்

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய காப்புறுதிக் கூட்டுத்தாபனம் முழுமையாக செயற்படாததனால் இலங்கை வங்கி வழங்க முன்வரும் வீடுகளைப் புனரமைப்பதற்கான கடன் வசதிகளை இப்பகுதி மக்கள் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை.

இலங்கை வங்கியின் மேற்படி கடன் திட்டத்தின்படி சேதமடைந்த வீடுகளைப் புனரமைப்பதற்குத் தேவையான கடனை அவ்வீடு சேதமடைந்த அளவைப் பொறுத்து வழங்கப்படும். இதற்கு மதிப்பீட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் காப்புறுதியும் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

கடந்த ஆண்டு சிறிலங்கா முப்படைகளினதும் தாக்குதலாலும் சேதமடைந்த யாழ். பிராந்திய காப்புறுதிக்கூட்டுத்தாபனம் கடந்தபல மாதங்களாக தனது சேவையைமட்டுப் படுத்தப்பட்ட அளவிலேயே வழங்கி வருகின்றது.

இந்த அலுவலகம் ஆயுட் காப்புறுதித் திட்டத்தைத் தவிர வேறுஎந்த வகையிலான காப்புறுதித் திட்டத்தையும் நடைமுறைப் படுத்தவில்லை. இதற்கு தளபாடம் மற்றும் இடவசதிபோன்றவை பற்றாக்குறையாக இருப்பதாக இந்த அலுவலக முகாமையாளரால் காரணம் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தின் மேற்படி நிலைமையால் இலங்கை வங்கி வழங்க முன்வரும் கடன்வசதி மக்களின் கைகளுக்கு எட்டவில்லை.

இக்கடன் திட்டத்திற்கான கால எல்லை இவ்வாண்டு ஏப்ரல் மாதத்துடன் முடிவுற்றது. எனினும் கடன் திட்டத்தை மக்கள் சீராகப் பயன்படுத்த முடியவில்லை என்று இலங்கை வங்கி 199? ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வரை கடன் திட்ட கால எல்லையை நீடித்திருக்கின்றது. ஆனால் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சீராக இயங்கும் வரையில் இக்கடன் திட்டத்தை மக்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை தொடரும் என்று இலங்கை வங்கியின் மாவட்ட முகாமையாளர் கவலை தெரிவித்தார். (க)

## சுத்தம் செய்ய நடவடிக்கை

(நல்லூர்)

தந்தை செல்வா நினைவாலயச்சூழலை விரைவில் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ் மாநகரசபைச் சுகாதாரப் பகுதி அறிவித்துள்ளது.

இடிபாடுகள் மத்தியில் நிற்கும் செல்வாவின் நினைவாலயத்தைச் சுற்றி வளர்ந்திருக்கும் புல் பூண்டுகளை அகற்றித் தரவேண்டும் என்று வரியிறுப்பாளர் ஒருவர் கடிதம் எழுதியிருந்தார். அதற்குச் சுகாதாரப பகுதி மேற்கண்டவாறு பதில் அனுப்பியுள்ளது.

## பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கத்தினரால் கிரிக்கெட் மத்தியஸ்தர்களுக்கு நடாத்தப்படும் பயிற்சி வகுப்புகள் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெறுமென சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மத்தியஸ்தர்கள் அனைவரும் இப்பயிற்சி வகுப்புக்களுக்குச் சமுகமளிப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

# முத்திரைத் தேவை பற்றி எமக்குத் தெரியாது

### - பதில் தபால் அத்தியட்சகர்

(யாழ்ப்பாணம்)

'யாழ் மாவட்டத்தின் முத்திரைத்தேவைபற்றி எமக்குத் தெரியாது. முத்திரைகளுக்கான தேவை பற்றியும், பற்றாக்குறை பற்றியும் பிரதம தபால் அதிபர் எமக்கு அறிவிக்கவில்லை. இதனால் முத்திரைகளைப் பெற்றுக் கொள்வதற்கு எம்மால் நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் இருக்கின்றது' இவ்வாறு யாழ் மாவட்ட பதில் தபால் அத்தியட்சகர் கூறினார்.

கடந்த பல மாதங்களாக யாழ்.மாவட்டத்தின் தேவைக்கேற்ப தபால் முத்திரைகளைத் தபால் திணைக்களம் அனுப்பிவைக்கவில்லை. இதனால் பொது மக்கள் அதிக விலை கொடுத்து முத்திரைகளைப் பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளமை பற்றி வினவிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை இறுதியாக யாழ். மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்ட சுமார் 50,000 ரூபா பெறுமதியான தபால் முத்திரைகள் ஒரு நாளுக்கான முத்திரைத் தேவையின் அரைப்பகுதியே என்று யாழ். பிரதம தபால் அலுவலகத்தின் பதில் தபால் அதிபர் தெரிவித்தார். (க)

# யாழ். அரசாங்க அதிபராக மாணிக்கவாசகர்?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு அடுத்ததாகப் பதவியேற்கவிருக்கும் அரசஅதிபர் மாணிக்கவாசகரே எனச் செயலக அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக இருந்த மாணிக்கவாசகர் கொழும்பு சென்றிருப்பதாகவும், இவருக்கான பதவி நியமனம் வெகுவிரைவில் வழங்கப்பட இருப்பதாகவும் அந்த அதிகாரிகள் கூறினர். (லோ)

# ஓய்வூதியம் கிடைக்காது ஆசிரியர்கள் அவதி

(நல்லூர்)

சுயவிருப்பின்பேரில் ஓய்வு பெற்ற யாழ்.மாவட்ட ஆசிரியர்கள் இன்று வரை இடைக்கால ஓய்வூதியம் தானும் பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் மிகவும் கஷ்ட நிலைக்கு உள்ளாகியுள்ளனர். இது பற்றி இன்றைய நிலைப்பாட்டை தங்களுக்கு நாம் சொல்லி விளங்க வைக்க வேண்டியதில்லை என்று கூறும் மகஜர் ஒன்றை சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் சிலர் கைச்சாத்திட்டு யாழ். பிரதேசக்கல்விப் பணிப்பாளருக்குச் சமர்ப்பித்துள்ளனர்.

இவ் விடயத்தில் நடவடிக்கையெடுத்து, ஆவன செய்யும்படி சுயவிருப்பத்தின் பேரில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளரைக் கோரியுள்ளனர்.

மகஜரின் பிரதிகள் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலருக்கும் ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து 1991 06 03 ஆம் தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

உயிரிரசாயனவியலில் விரிவுரையாளர் / உதவி விரிவுரையாளர்.

குறிப்பு: உயிரிரசாயனவியலில்/உயிர்தொழில்நுட்பத்தில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

சம்பள அளவுத்திட்டம்:
விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4500-10x 00- ரூ. 6,500/- மாதமொன்றுக்கு
(மருத்துவபீடத்தின் விரிவுரையாளர் முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பளஅளவுத்திட்டத்தில் 4500 ரூபவுக்கு மேலே இரண்டுபடி அதிகமாக அதாவது 4900/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு ஓராண்டுக்கு (நிலையானது)

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவி பதிவாளரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பெற்ற 23x10 சமீ அளவுடைய கடித உறை அனுப்பப்படல்வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
1991-05-03

(B-2478)



## JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY

VADDUKODDAI.

# VACANCY

A Vacancy exists for a suitable person to be on the staff and take responsability in the administration of the Institute.

**Qualification:**

An Engineering Degree from a recognised University Preferably with a post graduate qualification and necessary experience in teaching & administration.

**Salary:** Negotiable.

**Closing Date:** On or before 31st May, 1991

Send your application either to

The Rev. Principal,
Secretary (J. C. I. T. & A.),
JAFFNA COLLEGE,
Vaddukoddai.

OR

The Secretary,
C o C. S. I- Parsonage,
17, Francis Road,
Colombo - 6

Secretary,
J. C. I. T. & A

(B/2477)






1991 - 05 - 08



ஜனா
(யோகசுந்தரம் ஐங்கரன்-அளவெட்டி)

1986 ஆம் ஆண்டு இதேதினத்தில் வீரமரணமடைந்த
**ரகுமான்**
**யூலின்**

1988 ஆம் ஆண்டு காக்கைதீவில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பின்போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
**2 ஆம் லெப். வாமதேவன்**
(பூபாலபிள்ளை பிரதீஸ்வரன் - மண்டூர்)

198? ஆம் ஆண்டு தெல்லிப்பளையில் இந்தியப் படையினரின் தாக்குதலின்போது வீரமரணமடைந்த
**ஜனா** (யோகசுந்தரம் ஐங்கரன், அளவெட்டி)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B-2479)

### சிந்தனைக்கு

அணுசக்திப்போரில் வெற்றி பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரேவழி, அந்தப் போர் தொடங்காமலே பார்த்துக் கொள்வதுதான்.

—ஓமார் என் பிராட்லி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 08-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் : 2208
த.பெ.எண்: 05

# மூன்றாம் உலகில் அணுவாயுதங்கள்

உலக நாடுகளில் எல்லாவற்றிலுமுள்ள அணு ஆயுதங்களைக் கண்காணிப்பிற்குள்ளாக்க வேண்டும் என்ற உலகப்பாராளுமன்ற உறுப்பினர்களின் கோரிக்கை இன்றைய சூழ்நிலையில் மிகவும் வரவேற்கப்படத்தக்க அம்சமாகும்.

வளைகுடாப் போரின் பின் மூன்றாம் உலக நாடுகளின் அணுவாயுத / இரசாயன ஆயுதவல்லமை, ஏவுகணை வல்லமை என்பனவற்றில் மேற்குலகம், குறிப்பாக அமெரிக்கா தீவிர கவனம் செலுத்தி வருகின்றது. அமெரிக்கா தமக்குத் தெரியாமல் சில உலக நாடுகள் அணுவாயுத பலம் பெற்றுவிட்டனவோ என அஞ்சுகின்றது.

வளைகுடாப் போர் கொடுத்த படிப்பினையைக் கொண்டு தமக்குத் தெரியாமல் மூன்றாம் உலகில் ஒரு அணுவாயுத ஆற்றல் உள்ள நாடு உருவாவதைத் தடுப்பதில அமெரிக்கா தீவிர அக்கறை கொண்டுள்ளது.

இந்நிலையில், அமெரிக்காவின் கண்ணில் இன்று உள்ள நாடுகள் பாகிஸ்தானும், வடகொரியாவும் ஆகும். இந்நாடுகளின் அணு உற்பத்தி உலைகளைப் பார்வையிட அமெரிக்காவை அல்லது சர்வதேச கண்காணிப்புக்குழு ஒன்றை அனுமதிக்க வேண்டும் என அமெரிக்கா இந்நாடுகளின் மீது தீவிர அழுத்தங்களைப் பிரயோகித்து வருகின்றது.

ஆனால், இந்நாடுகள் இரண்டும் இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. அமெரிக்காவின் பொருளாதார இராணுவ உதவிகள நிறுத்தப்பட்டாலும் பார்வையிட அனுமதிக்கப் போவதில்லை என பாகிஸ்தான் திட்டவட்டமாக மறுத்துள்ளதோடு, பாகிஸ்தான் இராணுவச் செலவீட்டில குறைத்தல் ஏற்படாது எனவும தெரிவித்துள்ளது.

வடகொரியாவோ சற்று வேறுபட்ட தொனியில் தென்கொரியாவில் உள்ள அமெரிக்க அணு ஆயுதங்களைப் பார்வையிட அனுமதித்தால் வடகொரியா அணு உற்பத்தி நிலைகளைப் பார்வையிட சர்வதேச குழுவிற்கு அனுமதியளிக்கத் தயார் என அறிவித்துள்ளது. சோவியத் யூனியனின் நீண்டகால நட்பு நாடான வடகொரியா இது தொடர்பான சோவியத்தின் எச்சரிக்கையையும் பொருட்படுத்தவில்லை.

உலகின் மூன்றாம் உலக நாடுகளில் என்ன, முதலாம் உலக நாடுகளிலும் உள்ள அணு ஆயுதங்களும், அணு உலைகளும ஆபத்தானவைதான். அவை உலகில் பெரும் அழிவை விளைவிக்கக் கூடியவை. இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அமெரிக்காவால் ஜப்பானின்மீது போடப்பட்ட அணு குண்டின் தாக்கம் இன்னும இருப்பதாகத் தெரிய வருகின்றது. அதே போன்று சோவியத் யூனியனில் 1986 இல் வெடித்த ஜொறோபில் அணு உலையின் கதிரியக்கங்கள் இன்றும் இருப்பதாகவும் விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றார்கள்.

இந்நிலையில் அணு ஆயுதத்தின் பரவல் கட்டுப்படுத்தப்பட வேண்டியது என்பது அவசியமானதுதான். ஆனால் அதனை அமெரிக்கா மேற்பார்வை இட எண்ணுவதுதான் ஏற்க முடியாதது.

உலகில் முதலில் அணு ஆயுதத்தைப் பொறுப்பற்ற ரீதியில் பாவித்த நாடு அமெரிக்கா. ஆகையினால் பொறுப்பற்ற தன்மை பற்றி அமெரிக்கா எப்பொழுதும் பேச முடியாது. அத்தோடு அணு ஆயுதத்தால் ஏற்பட்ட அழிவைப் பார்த்த பின்பும் பெருமளவு அணு ஆயுதங்களை உற்பத்தி செய்துள்ள நாடும் அமெரிக்காவேதான்.

மேலும், அணுவாயுத வல்லரசுகளுக்கிடையில் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பாக ஒப்பந்தங்கள் நிறைவேறிக் கொண்டிருக்கையில் வான வெளியையும் ஆயுதமயமாக்கும் நோக்கில் பல ஆயிரம் பில்லியன் டொலர் செலவில் நட்சத்திரப் போர் திட்டத்தை தீவிரப்படுத்தி ஆய்வுகளை மேற்கொண்டுள்ள நாடும் அமெரிக்காவே.

இந்நிலையில் மூன்றாம் உலக நாடுகளில் அணு ஆயுதங்கள் பெருகுவது ஆபத்தானது, நெருக்கடி மிகுந்த இந்தச் சூழலில் மூன்றாம் உலக நாடுகள் பொறுப்பற்ற ரீதியில் நடந்து கொண்டால் உலகத்திற்குப் பெரும் கேடு ஏற்பட்டுவிடும் என அமெரிக்கா கூறுவதில் உண்மை எதுவுமில்லை. உலகில் கெடுபிடி யுத்தம் முடிந்து இன்று ஏற்பட்டு வரும் புதிய சூழலில் உலகிற்குத் தலைமை தாங்க முற்படும் அமெரிக்கா தனக்கு எவரும் அச்சுறுத்தலாக இருக்கக் கூடாது என்பதையே விரும்புகிறது.

இந்நிலையில் உலகப்பாராளுமன்ற உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையானது அணுவாயுத அச்சுறுத்தல் அற்ற ஓர் உலகை உருவாக்க வாய்ப்பளிக்கக் கூடியதாகும். ஆனால் இதற்கு வல்லரசுகள் எந்தளவில் சம்மதிக்கும்? தனக்கொரு நியாயம், பிறருக்கொரு நியாயம் என்ற ரீதியில் செயற்படுபவையாயிற்றே வல்லரசுகள்.

# மனிதாபிமானத்தின் மறுபெயர்தான் 'வித்தி'

கொழும்பு, பேராதனை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நிலவி வரும் பல்கலைக் கழகங்களோடு நாற்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்பு கொண்டவர், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராய் ஒன்பது ஆண்டுகள் பணி புரிந்தவர், தமிழின் நாட்டாரியல் சார்ந்த துறைகளிலே மிகவும் ஈடுபாடு கொண்டு அவற்றின் மறுமலர்ச்சிக்கு அயராது உழைத்தவர், சிறப்பாக நாட்டுக்கூத்து வளர்ச்சிக்கும் வாழ்வுக்கும் அர்ப்பண உணர்வோடு அருந் தொண்டாற்றியவர், நவீன நாடகத்துறையின் முன்னேற்றத்தை ஊக்குவித்தவர், தமிழர் சால்பு, இலக்கியத்தென்றல், தமிழியற் சிந்தனை முதலாம் ஆய்வு நூல்களின் ஆசிரியர், உலகத் தமிழாராய்ச்சி மன்றத்தின் இலங்கைக்கிளைத் தலைவராய் விளங்கி அதன் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை, அரசினது பெரும் எதிர்ப்புகளுக்கும் தடைகளுக்கும் இடையே திறம்பட நடத்திச் சாதனை புரிந்தவர் என்று பேராசிரியர் அமரர் சு. வித்தியானந்தனின் அநுபவம், அறிவாற்றல், ஆய்வீடுபாடு, தமிழ்ப்பற்று என்பன விரிந்து செல்வதோர் மகத்தான வரலாற்றின் சுவை நிறைந்தனவும் குறிப்பிடத்தக்கனவுமான அமிசங்களை உள்ளடக்கியனவாகும். இவற்றைக் கோடு காட்டுவது கூடச் சிரமமான, நீண்டு செல்லத்தக்க முயற்சியாகவே அமையும் என்ற அச்சத்தால், அவற்றுள் நுழைவதைவிடுத்து 'வித்தி' என்ற மாமனிதரின மனிதாபிமானத்தை நான் கண்டவாறு இரத்தினச் சுருக்கமாக எடுத்துக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1953இல் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் 'தமிழ் டிப்ளோமா' கற்க நுழைவனுமதி பெற்றேன். அப்பொழுது எனக்கு வயது இருபத்து மூன்று. என் சகபாடிகளில் நாற்பது வயதைஎட்டிக் கொண்டிருந்தவர்களும் இடம் பெற்றார்கள். இருபத்தொன்பது வயதான இளைஞர் 'வித்தி' எங்கள் ஆசிரியர். மிக இளமைக்காலத்திலேயே விரிவுரையாளரான

**சொக்கன்**

அவர், அதற்கு முன்பும் தம்மிலும் வயது மூத்தவர்களைக் கற்பித்து அநுபவம் பெற்றிருந்தார். இந்த அநுபவத்தினால் தம் மாணவர்களுக்கு அவர்களது வயதுக்கேற்ற கௌரவம் அளிக்க அவர் என்றும் தவறியதில்லை. ''இந்த வயதில் இவர்களுக்கு என்ன படிப்பு?'' என்ற ஏளன நோக்கோ. அவர்களை மாணவர் நிலைக்கு இறக்கிக் கீழ்மைப் படுத்துவதோ அவரின் சுபாவத்திலேயே இல்லை என்று தெரிந்து கொள்ளப் பல வாய்ப்புக்கள் கிடைத்தன. அறிவை ஊட்டுவதிலே தாய் போன்று தண்ணளி காட்டிய அவர், தம்மில் மூத்தோரின் அநுபவங்களுக்கு மதிப்பளித்து அவர்களை மூத்த சகோதரர்களாகவே நடத்தினார். அவர்களுக்குத் தாழ்வுச் சிக்கல் உண்டாகக் கூடிய சந்தர்ப்பங்கள் அவருடைய விரிவுரைவகுப்புகளில் என்றுமே ஏற்பட்டதில்லை.

நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனுமாய்ப்பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய் நடந்து கொண்ட வித்தியின் மனிதாபிமானம் என்றும் மறக்க முடியாதது. 'வித்தி' யின் தூண்டுதலும், உற்சாகமான ஊக்குவிப்பும் அறிவுரைகளுமே என்னை முதுமாணிப் பட்டதாரியாக மாற்றின என்பது உண்மை, வெறும் புகழ்ச்சி அல்ல.

பேராசிரியர் வித்தியானந்தன் ஓர் ஆலமரம். அந்த ஆலமரத்தில் அவரின் மாணவர் பலர் கூடு கட்டி வாழ்ந்தனர். நிழலிலே பல கலைஞர்கள் காலத்துக்குக் காலம் இளைப்பாறினார்கள். மற்றும் சிலர் அவரில் இருந்து உருவாகி, விழுதுகளாய் நின்று அவரால் தாங்கப்பட்டும, அவரைத் தாங்கியும் வாழ்ந்தார்கள். இத்தனை பேருக்கும் என்றும் தமது பரந்த பெரிய உள்ளத்தில் இடமளித்து நேசித்தவர் அவர். ஆம் மனிதாபிமானத்தின மறுபெயர் தான் 'வித்தி'; சந்தேகமேயில்லை.

# கிராம சேவகர்களுக்கு அமைச்சர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தென்பகுதி கிராமசேவகர்கள் அரசியலில் தீவிரமான பங்களிப்பு செய்வதை இட்டு பொது நிர்வாக மாகாணசபைகள் அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த எச்சரிக்கைச் சுற்றறிக்கையில் தற்போது நடைபெற இருக்கும் தேர்தல்களில் தென்பகுதி கிராம சேவகர்கள் (நிலதகாரி) தமது பொறுப்பு, கடமை ஆகியவற்றை விட்டு கட்சிகளினதும், வேட்பாளர்களினதும் தேர்தல் பிரசாரங்களிலும் மேடைப் பேச்சுக்களிலும் அதி தீவிரமாக ஈடுபட்டு வருவதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் இத்தகைய கிராமசேவகர்கள் உடனடியாக பதவியிலிருந்து நீக்கப்படுவதுடன் தண்டனையும் வழங்கப்படும் என்று மேலும் கூறப்பட்டுள்ளது.

(லோ)

## கருத்தரங்கும் கண்காட்சியும்

செஞ்சிலுவை, செம்பிறைச் சங்கங்கள் அவற்றின் பணி, கடமை குறித்து கருத்தரங்கையும், ஓவியக் கண்காட்சியையும் நடத்த உத்தேசித்துள்ளன. மக்களிடையே ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கருத்தரங்கையும், கண்காட்சியையும் நடாத்தத் தீர்மானித்திருப்பதாக செஞ்சிலுவைச் சங்கத்தின் செய்திககுறிப்பு ஒன்று தெரிவிக்கிறது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் முதலாவது நூலக ஆலோசனைக் குழுக்கூட்டம் மாநகரசபை அலுவலகத்தில் மாநகரசபை ஆணையாளர் பாலசிங்கம் தலைமையில் நாளை வியாழக்கிழமை 2 மணிக்கு நடைபெற உள்ளது.

# யாழ். செயலகத்திற்கு பெற்றோல் வழங்க மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்திற்குப் பெற்றோல் வழங்குவதற்கு அத்தியாவசியசேவைகள் பிரிவு மறுப்புத் தெரிவித்துள்ளது.

மின்சாரம் இல்லாத தற்போதைய நிலைமையில் செயலகத்தின் தேவைகளுக்குப் பெற்றோல் தரும்படி கொழும்பு அத்தியாவசிய சேவைகள் பிரிவினரிடம் கோரியபோது மேற்படி மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் தற்போது செயலகத்திற்குத் தேவையான பெற்றோல் கறுப்புச் சந்தையில் அதிக விலை கொடுத்துக் கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது. (க)

## வளைகுடாவில் பாதுகாப்பு ஏற்பாடு;

# பங்கு கொள்ளுமாறு ஈரானுக்கு அழைப்பு

(றியாட்)

வளைகுடாப் பிராந்தியத்தில் புதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடர்பான பணியில் பங்கு கொள்ளுமாறு ஈரானுக்கு வளைகுடா ஒத்துழைப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

தெஹ்ரான் உடனானபேச்சு வார்த்தைகள் ஏற்கனவே துவங்கி விட்டதாகவும் இந்த அமைப்பின் தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

சவூதிஅரேபியா, குவைத் கட்டார், பாஹ்ரெய்ன், ஓமான் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸின் வெளியுறவு அமைச்சர்கள் தங்களுடைய கூட்டத்தின் இறுதியில வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில் இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

ஆனால் ஈரானோ வளைகுடா நாடுகள் முன் வைத்த பாதுகாப்புத் திட்டங்களை ஏற்கனவே நிராகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## உணவு அட்டைகளை

# தொலைத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்

(ஈச்சமோட்டை)

தீவக பகுதிகளில் இருந்து இடம் பெயர்ந்தவர்கள் தமது உலர் உணவு அட்டைகளை தொலைத்திருந்தால் தற்போது அகதிகள் தங்கியிருக்கும் பகுதி கிராம சேவையாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். செயலக திட்டமிடல் பணிப்பாளர் எஸ். பத்மநாதன் கேட்டுள்ளார். மேற்படி அட்டைகளை சிபார்சு செய்து கொண்ட கிராம சேவையாளர்கள் பின் உதவி அரசாங்க அதிபரின் கவனத்துக்குகொண்டு வரவேண்டும். இதன் பின்னர் தான் உலர் உணவுக்குரிய பொருள்களை அவர்கள் பெற்றுக் கொள்ளமுடியும் என்றார். (34

### தமிழ்நாடு அரவக்குறுச்சி தொகுதி

# போட்டியிடுவோர் 249;

# வாக்குச்சீட்டு நீளம் 86 செ.மீ.

(சென்னை)

தமிழ்நாட்டுச் சட்டசபைத் தேர்தலில் 249வேட்பாளர்கள் போட்டியிடும் அரவக் குறுச்சித் தொகுதி வாக்குச்சீட்டு 86 செ மீ. நீளமும், 61 செ மீ அகலமும் கொண்டதாக ஒரு செய்திப்பத்திரிகையை விட நீளமானதாக உள்ளதென திருச்சியில் நேற்றுசெய்தியாளரிடம் பேசிய மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர். விஜயகுமார் தெரிவித்தார்.

இத்தொகுதி தேர்தல் தொடர்பாக மேலும் கருத்து வெளியிட்ட ஆட்சித் தலைவர் பெரிய அளவினதான 402வாக்குப் பெட்டிகள் தயாரித்து வருவதாகவும் தெரிவித்தார். இப்பெட்டிகளைத் தயாரிக்கும் டாங்கி நிறுவனம் இரண்டு அடி நீளமும், இரண்டு அடி அகலமும், இரண்டரை அடி உயரமும் கொண்ட இப்பெட்டிகளின் வேலையை இன்னும் பத்துத் தினங்களில் முடித்து விடும் எனவும் தெரிவித்தார்.

மேலும் வழமையாக நியமிக்கப்படும் இரண்டு தேர்தல் அதிகாரி, இரண்டு துணை அதிகாரிகளுடன் மேலும் ஐந்து தேர்தல் அதிகாரிகளை நியமிக்க தாம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

மேலும்இத்தேர்தல்தொகுதி பற்றிக் குறிப்பிட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் ஒருவாக்கு எண்ணுவதற்கு ஐந்து நிமிடங்கள் தேவைப்படும் என்றும் வாக்குகள் எண்ண கூடுதல் மேசைகள் 30 வரை தேவைப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் இத்தொகுதி வாக்குகள் கரூர்பசுபதி பாளையத்தில் உள்ள சிறு சேமிப்புக் கிடங்கில் எண்ணப்படுவதற்குத் தான் பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# நிலச்சரிவில் சிக்கிய இந்திய இராணுவ முகாம்

(டில்லி)

இந்தியாவில் கடந்த ஒரு வாரகாலத்தில் இடம்பெற்ற விபத்து மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் 123பேருக்குமேல இறந்துள்ளனர் என்றும், 36 பேர் காணாமற் போயுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது

ஆந்திராவில் கோதாவரி ஆற்றில் படகொன்றுகவிழ்ந்ததில இறந்தவர்களின் எண்ணிக்கை தொண்ணூறாக அதிகரித்ததுடன் மேலும் சடலங்கள் இருபபதாகக் கூறப்படுகிறது

அருணாசலப் பிரதேசத்தில் சவான என்ற இடத்தில் நிலச்சரிவினால் மண்ணுக்குள் புதைந்திருந்த எட்டுப் பேர்களின் சடலங்கள் மாநிலப் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது. அத்துடன்இராணுவ முகாம் ஒன்றும மண்ணால் மூடப்பட்டுள்ளது. நாற்பத்தி மூன்று இராணுவத்தினரையும் காணவில்லை எனறும அறிவிக்கப்பட்டுள்ளது

திரிபுராவில் புயல்காற்று வீசியதனால் பதினைந்திற்கும் மேற்பட்டோர் உயிர் இழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான நிவாரண நடவடிக்கைகளுக்காக இருபது கோடி ரூபா தேவையென மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

# அமெரிக்காவின் போக்கு; கொர்பசேவ் கவலை

(மொஸ்கோ)

கடந்த காலங்களில் ஏற்பட்டுள்ள அரசியல் ஆதாயங்களை பறிகொடுதது விட்டால் மீண்டும் கெடுபிடிப்போர் தொடங்கிவிடும் என்று சோவியத் ஜனாதிபதி கொர்பசேவ் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் ஆஸ்திரேலியாவில இருந்து வந்துள்ள பத்திரிகை தகவல் தொடர்புச் சாதன தலைவருக்கு அளித்துள்ளபேட்டி ஒன்றில் கொர்பசேவ் இவ்வாறு தெரிவிததார்.

சோவியத்யூனியன் குறித்த தனது போக்குக் குறித்துஅமெரிக்க நிர்வாகம் மறுபரிசீலனை செய்து வருவது குறித்தும் கொர்பசேவ் கவலை தெரிவித்தார்.

## விஷேட கூட்டம்

யாழ். பல்கலைக் கழகத்தில் கல்வி பயிலும் மட்டக்களப்பு, அம்பாறை மாணவர்களின் நலன் கருதி, இன்று (1991-05-08) காலை 10.00 மணிக்கு கலைப்பீட மாணவர் பொதுஅறையில் விஷேட கூட்டமொன்றுநடைபெறவுள்ளது. மட்டு. அம்பாறை. மாணவர்களை தவறாது சமுகமளிக்குமாறு, மறுமலர்ச்சிக் கழகத்தினர் வேண்டிக் கொள்கின்றனர்.

## கோலாலம்பூரில் 100 பேர் பலி

(கோலாலம்பூர)

மலேசியத் தலைநகர் கோலாலம்பூர் அருகே பட்டாசு செய்யும் தொழிற்சாலையொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் சுமார் நூறு பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் எனத் தெரியவருகிறது.


## மரண அறிவித்தல்

### விநாசித்தம்பி ஆறுமுகம்

(ஓமந்தை)

மீசாலையை வசிப்பிடமாகக் கொண்ட ஆறுமுகம் அவர்கள் 07-05-91 அன்று காலமானார். இவர் காலஞ்சென்ற விநாசித்தம்பியின் சிரேஷ்ட புத்திரரும் தங்கமுத்துவின் அன்புக்கணவரும், சிவப்பிரகாசம்(துரை), வேலாயுதபிள்ளை (மீசாலை S. M.), மகாதேவா (சங்கர் றைஸ் மில்ஸ், செங்கலடி) கோடீஸ்வரன் (ஆறுமுகம் அன் சன்ஸ், ஓமந்தை), யோகேஸ்வரன் (றட்ணா றேடர்ஸ், கொழும்பு), லோகேஸ்வரி, தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும் சரஸ்வதி, கணேஸ்வரி, சுபபுலட்சுமி, ரஜனி கந்தசாமி (சுங்கத் திணைக்களம்), காலஞ்சென்ற குணரட்ணம் இராசபூபதி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 08-05-91 இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணியளவில் கண்ணாடித்திட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(R/1380) சிவப்பிரகாசம் (மகன்)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**வேப்பங்குளத்தில்**

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்:

| | |
|---|---|
| ★ எவ். என். சி. ரகத் துப்பாக்கி | - 03 |
| ★ ரவைக் கூடுகள் | - 05 |
| ★ ஆர்.பி ஜி. ஷெல் | - 06 |
| ★ புறப்ளர் | - 05 |
| ★ 48 எம் எம் ஷெல் | - 01 |
| ★ ஜே ஆர். ரக கைக் குண்டுகள் | - 06 |
| ★ 5 56 ரவைகள் கோர்வையுடன் | - 1445 |
| ★ 5.56 தனிததனி ரவைகள் | - 2255 |

வேப்பங்குளப் பகுதி மோதலின் பின்னர் சிறிலங்கா இராணுவத்தினரின் ஆயுதங்கள் மூன்றாவது தடவையாக இப்பகுதியிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இம்மாதம் இரண்டாம் திகதியன்று இரண்டாவது தடவையாக இப்பகுதியிலிருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டிருந்தது தெரிந்ததே. (மு)

**வவுனியா**

இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் நாற்பதுக்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளன

இதேவேளை இரண்டு ஹெலிகொப்ரர்கள் ஐம்பது கலிபர் தாக்குதலையும் ஐந்து அங்குல மோட்டார் ஷெல் தாக்குதலையும் மேற்கொண்டன அத்துடன் மடு இராணுவ முகாமில் இருந்து இப்பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலும் மேற்கொளளப்பட்டது. தற்பொழுது சிறிலங்கா இராணுவத்தினர் இறம்பைக்குளம் கோழியாகுளம், பணிக்கனிராவி ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**பாம்பு**

மலர் (வயது 41) என்பவர் மரணமானார். அலெக்சாண்டர் கமலநாயகி (வயது 33) என்பவரே ஆபத்தான நிலையில் உள்ளார் கிறிஸ்தோபர் மாசுகிறற் (வயது 55) என்பவர் குணமடைந்து வருகிறார். (ச)

# அவுஸ். இருந்து அரிசி; ஈராக் இறக்குமதி

(பாக்தாத்)

அவுஸ்திரேலியாவிடம் இருந்து பத்துலட்சம் தொன் கோதுமையையும், தாய்லாந்தில் இருந்து இரண்டு லட்சம் தொன அரிசியையும் இறக்குமதி செய்யப் போவதாக ஈராக் தெரிவித்துள்ளது.

இதற்காக இந்த நாடுகளின் நிறுவனங்களுடனும் தனித்தனி ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருப்பதாக ஈராக்கிய செய்திநிறுவனமான ஐ என்.ஏ. தெரிவிததது.

இதற்கான பணத்தை ஈராக் வெளிநாட்டு வங்கிகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ள ஈராக்கின் கணக்கிலிருந்து பெறப்படும் என்று ஈராக்கிய வர்த்தகத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக ஈராக் முடக்கப்பட்டுள்ள நிதியில் சிறு பகுதியை உணவுப பொருள்கள் மற்றும் மருந்து இறக்குமதிக்கு அனுமதிக்குமாறு ஐ நா. சபையை கேட்டிருந்தது.

# வேலூரில் பொலிஸார் சூடு; ஊழியர் மரணம்

(வேலூர்)

வேலூரில நேற்றுமுன்தினம் பொலிஸார் நடாத்திய துப்பாக்கிச் சூடுகுறித்து விசாரிக்க தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

தளபதி அழகிரி போக்குவரத்துக்கழக ஊழியர்கள் மீது பொலிஸார் நேற்றுமுன்தினம் நடாத்திய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பற்றி விசாரிக்க ஓய்வு பெற்ற நீதியரசர் ஜி ராமனுஜம் தலைமையிலான குழுவொன்று நியமிக்கபபட்டுள்ளது. போக்குவரத்துக்கழக ஊழியர்களுக்கும், பொலிஸாருக்குமிடையே இடம்பெற்ற கைகலப்பைத் தொடர்ந்து பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், நூற்றுக்கணக்கானோர் காயமடைந்தனர். இச்சம்பவத்திற்கு ஆட்சேபம் தெரிவித்து நேற்று மாநிலம் முழுவதும் போககுவரத்துக் கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர் வேலூரில கடையடைப்பும் இடம் பெற்றது

**ஓய்வூதியம்**

படி திட்டத்தின் கீழ் இளைப்பாறியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளதாகவும், வடக்குக்கிழக்குப் பகுதியினரே இவ்வாறு புறக்கணிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் தெரிவிததார்.

இந்த ஓய்வூதியங்களை வழங்குவதற்கென நாட்டின் சகல பகுதிகளிலுமுள்ள கச்சேரிகளில் மினி ஓய்வூதியப் பிரிவுகள்ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் வடக்குக் கிழக்கில் அதை ஆரம்பிப்பதற்குரிய நடவடிக்கை எதுவும் இதுவரை மேற்கொளளப்படவில்லையெனவும் அவர் மேலும் தெரிவிததார். (ச)

**யாழ். வைத்தியசாலையில்**

சுகாதார பரிசோதகராக இருந்த தவராசா என்பவர் ஓய்வு பெற்றுவிட்டதைத் தொடர்ந்து எந்த ஒரு சுகாதாரப் பரிசோதகரும் நியமிக்கப்படவில்லையெனத் தெரிவிக்கப் பட்டது. (யோ)

**உலர் உணவு**

கத்தை மேற் கொண்டு வருகின்றன இதனால் இந்த ஸ்தாபனங்களின கையிருப்பு முடிவடையும் நிலையில் உள்ளதாக அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

அதேவேளை நேற்றுமுன் தினம் அனைத்து அரச சார்பற்ற நிறுவனங்களையும் அவசரமாக செயலகத்துககு அழைத்து நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது உணவு விநியோகத்திற்கான வேலைகளை அடுத்த வாரம் வரையும் அரச சார்பற்றநிறுவனங்களையே கவனிக்குமபடியும் அடுத்தவாரத்தில்இருந்து செயலக புனர்வாழ்வுப்பிரிவினரால் உலர்உணவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் செயலக அதிகாரிகளால் உறுதிவழங்கபபட்டிருக்கின்றது

செயலக புனர்வாழ்வுப்பிரிவைப் பொறுத்தவரையில் அண்மையில் பருத்தித்துறைத் துறைமுகத்திற்கு வந்து சேர்ந்த இரு கப்பல்களில ஒன்றில் 90 சதவீதமானவை யு எஸ் எயிட் நிறுவனத்தின் உதவிப் பொருள்களாகவும் மிகுதியே புனர்வாழ்வுப் பிரிவுக்குரிய உலர் உணவுப் பொருள்களாக இருந்தன. மேலும் தீவகத்திற்கான 38 ஆம் கட்டத்துக்குரிய உணவுப்பொருள்கள் தீவுப்பகுதி கூட்டுறவுச் சங்கங்களில இராணுவததினரின் பிடியில் சிககியுள்ள நிலைமையில் செயலகத்தின் உணவு விநியோக நடவடிக்கைகளுக்கு போதிய உணவுப்பொருள்கள் கையிருப்பில் இல்லை என்பதாலும் அந்த கப்பலை எதிர்பார்த்திருப்பதாலும் உணவு விநியோகத்தை பிறபோட வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதாக நேற்று முன்தினம மாலை செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவிககப்பட்டது. (க)

**ஆசிரியர்களின்**

போராளிகளாகிய எமக்கு உற்சாகத்தையும் அளிக்கிறது". இவ்வாறு யாழ். மாவட்டத் தளபதி தினேஷ் அவர்கள் சாவகச்சேரிடிறிபேர்க் கல்லூரியில் போராட்ட வரலாற்றைச் சித்தரிக்கும் புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்துக் கூறினார்.

இபபுகைப்படக் கண்காட்சி கண்ணுக்கு விருந்தளிக்கும் ஒன்றாக அமையாது எமது போராட்ட வரலாற்றையும், போராட்டத்தின் தன்மையையும், தமிழரின் இன்றைய அவலத்தையும் எல்லோர் மனத்திலும் பதியவைக்கும் நிகழ்வாக அமைய வேண்டும் என மேலும் கூறினார்.

**சிறிலங்காவின்**

வருகிறோம். பயிற்சிகளுக்குப் பின ஏற்புடைய தல்லாத நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்று எம்மால் சந்தேகிக்கப்படுபவர்களுக்கு நாம் பயிற்சி தருவதில்லை. ஒழுக்கம், கட்டுப்பாடு. துறைசார்ந்த நுட்பம் ஆகியவை தொடர்பானது தான் எம்மால் வழங்கப்படும் பயிற்சி இன்று பிரிட்டிஷ் படை அதிகாரிகள் எவரும் சிறிலஙகவில் பொலிஸாருக்கும் படைகளுக்கும் பயிற்சியளிக்கும் பணியில இல்லை.

ஒஸ்ரோ வங்கியின் நூலில் ( By way of deception ) சிறிலங்காவுக்கு வழங்கிய உதவிப் பணம் ஆயுதக் கொள்வனவுக்குப் பயன்படுத்தப்பட்டதாக எழுதபபட்டிருப்பதை எம்மால் அவதானிக்க முடிந்தது. ஆனால் இதை நிரூபணமாக்குவதற்குப் போதிய ஆதாரம் இலலை. சிறிலங்கா அரசுக்கு 30லட்சம் டாலர் நிதியுதவி வழங்க நாம் முன்வந்தது உங்களுக்குத்தெரியும். மனித உரிமைகள் மீறல், மற்றும் விடயங்கள் குறித்து பரிசீலனை மேற்கொண்ட பிறகு தான் அந்தஅளவு பணததை நாம் வழங்குவுள்ளோம்.

இவ்வாறு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேயரின் கடிதத்தில் மேலும் குறிப்பிடபபட்டுள்ளது.